
# அதிசய நீரூற்று "ஸம்ஸம்"



கலாபூஷணம் அகத்தி முறிப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# النبع العجيب ماء زمزم

المؤلف : شيخ فريد زين الدين

تم إصدار هذا الكتيب بمناسبة افتتاح مركز / الشيخة

أحمد الحمين (رحمها الله ) من المملكة العربية السعودية

بواسطة جماعة أنصار السنة المحمدية

فركهاديني ، سريلانكا

2012-12-21 م

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசய நீரூற்று
# "ஸம்ஸம்"

ஆசிரியர்
கலாபூஷணம் அகத்திமுறிப்பான்

**வெளியீடு**
ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா
பறகஹதெனிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தக விபரத் தொகுப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அதிசய நீரூற்று "ஸம்ஸம்" |
| ஆசிரியர் | : | கலாபூஷணம் அகத்திமுறிப்பான் |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| படிகள் | : | 3000 |
| பக்கங்கள் | : | 48 |
| அச்சிட்டோர் | : | AJ அச்சகம், புகையிரத நிலைய வீதி, தெஹிவளை |
| வெளியீடு | : | ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா, பறகஹதெனிய. |
| விலை | : | 70 ரூபா |
| ISBN | : | 978-955-8732-49-6 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்று கவிதை

அருளாளன் அன்புடையோன் அல்லாஹ் வின்நாமப்
பெருமையை முன்னுரைத்து புகல்வேன் - அருமையாம்
அகத்தி முறிப்பானின் அதிசய நீரூற்று
சகத்தில் உயர்ந்த ஸம்ஸம்

அகத்தி முறிப்பானென் அன்றைய மாணாக்கன்
அகத்தில் குருபக்தி அதிகம் - இகத்தில்
என்றுமே என்னிடத்து இனியவன் என்றமிழின்
பொன்னின் குடம்போன் றவன்

குற்றமறக் கற்றான் குணத்தில் உயர்ந்து நின்றான்
வெற்றியுற நன்முயற்சி மேவினான் - கற்றபின்னர்
அள்ளித் தொடுத்தான் அவன்தந்த நூற்களிலே
உள்ளதுதான் அதிசய நீர் ஊற்று.

ஆழ்ந்து படித்தேன் அதிசய நீரூற்றை
ஓர்ந்து அறிந்தேன் உயர்தமிழை சேர்ந்து
சொற்கள் இணையும் சொற்சிலம் பாட்டத்தினை
தேறித் தெளித்தேன் தேன்

வழுவில்லை வாக்கியத்தில் வடுவில்லை சொற்கருத்தில்
அழகுண்டு தற்குறிப்பு அணியில் - மொழியின்
நிறுத்தற் குறியீட்டில் நேராம் உரைநடையில்
பொருத்தம் உழவழகே அழகு

என்னிடத்தில் கற்றோர் ஏராளம் ஏராளம்
தன்னிடத்தில் உள்ள திறனால் - முன்னிடத்தில்
வருமென்றன் மாணாக்கன் வாழ்த்தற் குரியான்
அருமையின் அகத்திமுறிப் பான்

வித்துவான் எம். அப்துர் ரஹ்மான்
சதாம் மன்ஸில்
438/3, கலுகமுவ, கெலிஓய.

(பக்தி - என்பதற்கு மரியாதை என்ற பொருளும் உண்டு)
-மதுரைத் தமிழ் அகராதி-, -நர்மதாவின் தமிழ் அகராதி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே! சாந்தியும், சமாதானமும் நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர்கள், தோழர்கள், அன்னாரைப் பின்பற்றுகின்ற அனைவர் மீதும் என்றென்றும் உண்டாவதாக

உலகில் வாழும் பல இலட்சம் மக்கள் புனித மக்கா நகர் சென்று திரும்பும் போது சுமந்து வந்து தமது உறவுகளை உற்சாகப்படுத்தும் பானமாக பரிமாறும் ஸம்ஸம் நீரின் வரலாறு ஆச்சரியமும், அதிசயமுமிக்கது.

நபி இபுறாஹீம் (அலை) அவர்கள் தனது மனைவி ஹாஜராவையும், மகன் இஸ்மாஈல் (அலை) அவர்களையும் பாலைவனப் பெருநிலப்பரப்பில் தன்னந்தனியாக விட்டுச் சென்ற வேளையில், "இபுறாஹீமே! மனிதரோ, வேறெந்த பொருளோ இல்லாத இப்பாலைவனத்தில் எங்களை விட்டு நீங்கள் எங்கே போகின்றீர்கள்?" என்று ஹாஜரா அவர்கள் கேட்டார்கள். இபுறாஹீம் (அலை) அவர்கள் அவர்களைத் திரும்பிப் பார்க்காமலே நடக்கலானார்கள். மீண்டும் அன்னை ஹாஜரா அவர்கள் "அல்லாஹ்தான் உங்களுக்கு இப்படி கட்டளையிட்டானா?" என்று கேட்க "ஆம்" என்று சொன்னார்கள். அதற்கு அன்னை ஹாஜரா அவர்கள் "அப்படியென்றால் அவன் எங்களை கைவிடமாட்டான்" என்று பதில் சொன்னார்கள்.

அல்லாஹ்வின் மீது கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையினால் தனிமை அவர்களை விட்டும் அகன்றது. தாகத்துக்குக் கூட ஒரு சொட்டு தண்ணீர் இன்றி பால் குடி மறவாத பச்சிளம் பாலகன் இஸ்மாஈல் (அலை) அவர்கள் தவித்துக் கொண்டிருந்த போது அல்லாஹுதஆலா வானவர் ஒருவரை அனுப்பி அதிசய நீரூற்றை வெளிப்படுத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வரலாற்றுப் பேருண்மையை நினைவுபடுத்தவும், அதன் மூலம் மக்கள் பயன்பெறவும் அல்லாஹுதஆலா வற்றாத நீரூற்றை வெளிப்படுத்தி, வற்றாத அவன் அருளையும் அருளியுள்ளான்.

அவனது அருளும், அற்புதமும் நிறைந்த "ஸம்ஸம்" நீரூற்றின் ஆரம்பம் முதல் இன்றைய அதிசயங்கள் வரையான நிகழ்வுகளை மிக அழகாக இந்நூல் படம்பிடித்துக் காட்டியுள்ளது.

தமிழ் எழுத்துலகுக்கு மிகப் பரிச்சயமான, வரலாற்று சம்பவங்களை மிக அற்புதமாக அனைவரும் விளங்கக் கூடிய முறையில் எழுத்துருவப்படுத்தும் அஷ்ஷெய்க் செய்னுதீன் செய்கு பரீத் அவர்கள் "அதிசய நீரூற்று ஸம்ஸம்" என்ற இந்நூலையும் தொகுத்துள்ளார்கள்.

"ஸம்ஸம்" நீர் பற்றி தமிழில் தரமான ஒரு நூல் வெளிவரவில்லையே என்ற இடைவெளியை இது பூரணப்படுத்தியுள்ளது.

இந்நூல் ஒவ்வொருவரது இல்லத்திலும் இருந்தாக வேண்டும். இதனை வாங்கிப்படித்து பயன்பெறுமாறும், நூலாசிரியரின் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

அன்புடன்,

அஷ்ஷெய்க் என்.பீ.எம். அபூபக்கர் சித்தீக் மதனி
பொதுத்தலைவர்,
ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா,
கண்டி வீதி, பறகஹதெனிய,
சிறீலங்கா.

10.12.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

அதிசய நீரூற்று "ஸம்ஸம்" எனும் எனது இச்சிறு நூலாக்கத்துக்கு உள எண்ணத்தைத் தோற்றுவித்து, உங்கள் கரங்களில் தவழும் அளவு சிறப்பாகச் செய்வதற்கு உதவி புரிந்த அந்த ஏக இறைவனுக்கே புகழனைத்தும். அல்ஹம்து லில்லாஹ்.

"ஸம்ஸம்", புனித நீர் என்பதில் கருத்து வேற்றுமை எவரிடையேயும் இருக்க முடியாது. எனவே, அதன் சிறப்புகள், மகிமைகள் பற்றிக் கூறும் ஒரு நந்நூல் தமிழுலகில் இல்லையே என்ற ஆதங்கம் என் மனதில் உருப்பெற்று வளர்ச்சியுற்றுக் கொண்டிருக்கும்வேளை ஒரு நாள், சகோதரர் மௌலவி எம்.எஸ்.அப்துல் வதூத் ஜிப்ரி அவர்களின் இல்லம் சென்றிருந்தேன்.

அங்கு, "மு.ஃ.ஜிஸாதுஷ் ஷிபா பீமாஇ ஸம்ஸம்" என்ற "ஸம்ஸம்" பற்றிய அரபு மொழியிலான நூலைக் கண்ணுற்றதும் தமிழ் மொழியில் அதுபற்றிய ஒரு நூலை ஆக்க வேண்டும் என்ற அந்த ஆதங்கம் அல்லாஹ்வின் அருளால் திடமானது.

அத்தோடு மதீனா முனவ்வறா, இஸ்லாமிய பல்கலைக் கழகத்தில் கலாநிதி கற்கை நெறியை மேற்கொள்ளும் பறகஹதெனிய சகோதரர் அஷ்ஷெய்க் அம்ஜத் றாஸிக் ஸலபி அவர்களிடம் இதனைத் தெரிவித்தபோது அவரும் "பழ்லு மாஇ ஸம்ஸம் " என்ற அரபு மொழி நூலையும் எனக்கு அனுப்பி உதவினார்.

இவ்விரு நூற்களின் துணையுடன் அரபு மொழியிலான சஞ்சிகைகள், தினசரிப் பத்திரிகைகள் வாயிலாகத் திரட்டிய சில தகவல்களையும் ஒன்றிணைத்து இந்நூலை ஆக்கியுள்ளேன்.

இதற்குப் பல வழிகளிலும் எனக்கு உதவி புரிந்த சகோதரர்களான அஷ்ஷெய்க் எம்.எஸ்.அப்துல் வதூத், அஷ்ஷெய்க் அம்ஜத் றாஸிக், அஷ்ஷெய்க் முஜீபுர் ரஹ்மான் ஹிழ்ர் முஹம்மத், அஷ்ஷெய்க் நதீர் மீரா முகைதீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோருக்கும் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய என் தமிழ் ஆசான் வித்துவான் எம்.அப்துர் ரஹ்மான் (றஹிமஹுல்லாஹ்) அவர்களுக்கும் இதனை வெளியிட அனுமதியளித்து பதிப்புரையும் வழங்கிய ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யாவின் பொதுத் தலைவர் அஷ்ஷெய்க் என்.பீ.எம்.அபூபக்கர் சித்தீக் மதனி, அதன் பொதுச் செயலாளர் ஏ.எல். கலீலுர் ரஹ்மான் (எம்.ஏ), அதன் நிதிச் செயலாளர் எம்.எம்.ஹித்மதுல்லாஹ் (எம்.எஸ்.ஸீ), ஆகியோருக்கும் கணனி மையப் பொறுப்பாளர் சகோதரர் எம்.எம்.றிழ்வான், இந்நூலை வடிவுற அமைத்த கிராபிக் டிசைனர் தம்பி எம்.டீ. அஸ்லம் ஆகியோருக்கும் ஜம்இய்யாவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் என் நன்றியைத் தெரிவிப்பதோடு எனது மைத்துணரான சிறாஜுதீன் அப்துல் லதீப், மக்கா உம்முல் குரா பல்கலைக்கழக மாணவர், மருமகன் மபாஸ் மக்கி ஆகியோருக்கும் என் நன்றி என்றும் உண்டு. வாசகர்களாகிய உங்கள் ஆதரவுக்காக உங்களுக்கும் என் நன்றிகள்.

பத்து வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட இந்நூல் தற்போது வெளியிடப்பட்டாலும் "ஸம்ஸம்" நீர் பற்றிய அனைத்து புதிய விடயங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதனைப் படிக்கும் நீங்கள் இந்நூல் பற்றிய ஆலோசனைகளையும் கருத்துக்களையும் எழுதுவதோடு இதில் காணப்படும் பிழைகளை சுட்டிக் காட்டி உதவுமாறும் கேட்டுக் கொள்கிறேன். வல்ல அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் ஈருலகிலும் நல்லருள் புரிவானாக. ஆமீன்.

அகத்திமுறிப்பான்

Seinudeen Seihu Fareed,
140, Rasool Nagar, Nagavil, Palavi,
Puttalam - Sri Lanka.
0322269077 , 0773477991
Email: akaththimurippaan@gmail.com

**12.12.2012**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம் பக்கம்


01. "ஸம்ஸம்" ஓர் அறிமுகம். 01

02. "ஸம்ஸம்" நீரூற்றின் தோற்றம். 04

03. தூர்ந்த "ஸம்ஸம்" 08

04. "ஸம்ஸம்" மீள் புணரமைப்பில் அப்துல் முத்தலிப். 10

05. "ஸம்ஸம்" நீரூற்றினது தொன்மை. 18

06. "ஸம்ஸம்" கிணற்றின் கட்டமைப்பு. 19

07. "ஸம்ஸம்" கிணற்றின் இன்றைய நிலை. 22

08. "ஸம்ஸம்" நீரின் மகிமைகள். 25

09. "ஸம்ஸம்" நீரினால் நபியவர்களது இதயம் கழுவப்பட்டமை. 28

10. "ஸம்ஸம்" நீர் அருந்த நபியவர்கள் காட்டிய ஆர்வம். 29

11. "ஸம்ஸம்" நீரின் மீதான ஆர்வம். 31

12. "ஸம்ஸம்" ஒரு நோய் நிவாரணி. 32

13. "ஸம்ஸம்" நீரை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லல். 34

14. "ஸம்ஸம்" நீருடன் தொடர்புள்ள சில ஐயங்கள். 35




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஸம்ஸம்" ஓர் அறிமுகம்.

உலகில் இன்று பல இறை படைப்புகள் மானிட சமுதாயத்தினால் அதிசயங்கள், அற்புதங்களாகக் கொள்ளப் பட்டு போற்றப்படுகின்றன. உலக அதிசயங்களுள் ஒன்றாகப் பிரகடனப் படுத்தப்படத் தகுதி பெற்ற, முஸ்லிம்களால் அதிசய மாகவும் படிப்பினைகள் பல பொதிந்தனவாகவும் கருதப்படும் ஒன்றே மக்காவில் அமைந்துள்ள "ஸம்ஸம்" எனும் கிணறாகும்.

இறுதி நாள் நெருங்கும்போது இப்புவியிலுள்ள நீர் நிலைகள் அனைத்தும் வற்றிவிட "ஸம்ஸம்" நீர் மாத்திரம் எவ்விதக் குறைவுமின்றி மறுமைநாள் வரை ஊறிக் கொண்டே இருக்கும் என்று இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகிறார்கள். அன்னை ஹாஜறா அழுது புலம்பி மகனின் தாகம் தீர்க்க அங்கலாய்த்தபோது ஜிப்ரீலின் இறக்கையினால் அது வெளிப்படுத்தப்பட்டது என்பதால் காலங்கள் பல கடந்தாலும் அது வற்றாத ஊற்றாக இருக்கும் என்பது உமர் மிழ்வாஹி போன்ற வரலாற்று ஆய்வாளர்களின் வாதமாகும்.

இது பல பெயர்களால் முன்னர் அழைக்கப்பட்டுள்ளது. "மக்காவின் வரலாறு" என்ற நூலை யாத்த அல்-பாகிஹீ, அல்-அஷ்ரகீ ஆகிய இரு அறிஞர்களும், அக்கிணறு பண்டைய காலங்களில் ஐம்பத்து நான்கு பெயர்களால் மக்களிடையே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு, அவற்றை பட்டியல் இட்டுக் காட்டியுள்ளனர். நூலின் விரிவஞ்சி அவை தவிர்க்கப்படுகின்றது.

"ஸம்ஸம்" நீர் பற்றி அதிக அறிஞர்கள், அவ்வப்போது, கால தேவைக்கேற்ப எழுதி வந்துள்ளனர். மக்காவின் வரலாறு எழுதப்பட்டுள்ள நூற்களுள் இந்த "ஸம்ஸம்" நீரூற்று பற்றி குறிப்பிடாத எந்த நூற்களும் இல்லை. இந்த நீரூற்று பற்றி மாத்திரம் ஆராயும் சுமார் இருபதுக்குமதிகமான நூற்கள் அறிந்தளவில் அரபு மொழியில் மாத்திரம் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு, ஹிஜ்ரி 852 ல் மரணமுற்ற பிரபல மார்க்க அறிஞர் அல்-இமாம், அல்-ஹாபிழ் இப்னு ஹஜர் அல்-அஸ்கலானி (ரஹ்) அவர்கள் ""ஸம்ஸம்" நீர் அருந்துவதின் நோக்கம் நிறைவுறும்" என்ற நபி மொழியையொட்டி, அவர்களிடம் வினவப்பட்டதற்கு, அவர்கள் அளித்த விளக்கங்களும் ஒரு சிறு நூலாக இருப்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

அது இற்றைக்கு சுமார் ஆறாயிரம் ஆண்டுகள் பழைமையானது என நம்பத்தகு பல வரலாற்று சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது. இவை, நபிமார்களின் தொடரில் இபுறாஹீம் (அலை) அவர்களுடன் தொடர்புற்றிருப்பதை உறுதிப்படுத்துகின்றன.

அன்று முதல் இன்று வரை அது பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட்ட போதிலும், நபி (ஸல்) அவர்களது பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்களால் புனர் நிருமாணம் செய்யப்படும்வரை இடையே ஒரு சொற்ப காலம், அது கவனிப்பாரற்று தூர்ந்து போயிருந்தது.

இஸ்லாமியக் கிரியைகளான ஹஜ், உம்றா ஆகியவற்றை நிறைவேற்ற மக்கா செல்லும் அனைவரும் நபி வழிக்கமைய "ஸம்ஸம்" நீரை அருந்தி தாகம் தீருவர். அந்நீரின் சிறப்புகளை எடுத்துக் கூறும் நபிமொழிகளும் முன்னோர் கூற்றுக்களும் பல நூற்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன. இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக,

**"புவிப் பரப்பின் நீர் நிலைகளுள் மிகச் சிறந்தது "ஸம்ஸமே""**

என தபறானீ, இப்னு ஹிப்பான் போன்ற ஹதீஸ் நூற்களில் பதிவு செய்யப்பட்டுள்ள நபிமொழியைக் குறிப்பிடலாம்.

"ஸம்ஸம்" நீரூற்று உருவான காலம் முதல் இன்று வரையும், மக்கள் அதன் நீரை தாமும் அருந்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையோருக்கும் அருந்தக் கொடுப்பதில் பேரார்வம் கொண்டுள்ளனர். நபி (ஸல்) அவர்கள், நான்கு கலீபாக்கள், அவர்கள் பின் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்கள் அனைவரும் அக்கிணற்றை பாதுகாத்து பராமரிப்பதில் அக்கறை கொண்டு செயல்பட்டதுடன் உலகின் பல திக்கிலிருந்தும் புனித க.்.பாவை தரிசிக்க வருவோர் அந்நீரை இலகுவில் அருந்துவதற்கும் பல சிறந்த ஏற்பாடுகளையும் செய்தனர். நவீன மாற்றங்களுடன் இன்றும் இது தொடர்கின்றது.

ஆனாலும், இன்று குறிப்பாக, சவூதி அரேபிய ஆட்சியாளர்கள் அதனை திட்டமிடுதலுடன் தேவைக்கேற்ப விரிவுபடுத்தியும் வருவதுடன் அதை பராமரித்துப் பாதுகாப்பதிலும் தம் முழுக் கவனத்தையும் செலுத்தி, முழுமூச்சாக செயற்பட்டு வருகின்றனர். இதனால், அது இன்று அழகு பெற்று புதுப் பொலிவுடன் திகழ்கின்றது.



**வீரிவாக்கலுக்கு முற்பட்ட காலத்தில் "ஸம்ஸம்" கிணறு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஸம்ஸம்" நீரூற்றின் தோற்றம்.

நபிமார்கள் தொடரில் வந்த நபி இபுறாஹீம் (அலை) அவர்களுக்கு தனது இரு வயதுப் பாலகன் இஸ்மாயீல் (அலை) அவர்களையும் மனைவி ஹாஜறாவையும் தற்போது, புனித க.்.பா அமைந்திருக்கும், மனித சஞ்சாரமற்ற அன்றைய பாலைவனத் தரையில் விட்டு வருமாறு வந்த இறை கட்டளையை நிறைவேற்றிவிட்டு வந்ததன் பின், பாலகன் இஸ்மாயீல் (அலை) அவர்கள் தாக மிகுதியால் வீறிட்டழுதார்கள். அப்பாலகனுக்கு தண்ணீர் புகட்டும் நோக்கில் இறைகட்டளைக்கமைய வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்களால் வெளிப்படுத்தப்பட்ட நீரூற்றே "ஸம்ஸம்" ஆகும் என்பது ஒரு வரலாற்றுத் தகவலாகும்.

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறும் மற்றுமொரு தகவலின்படி,

இபுறாஹீம் (அலை) அவர்கள் தன் மனைவி ஹாஜறாவையும் மகன் இஸ்மாயீலையும் மக்காவில் க.்.பாவின் அருகில், அவர்களிடம் சொற்ப நீரும் உணவும் இருக்க விட்டுச் சென்றார்கள். பிரிந்து சென்ற அவர்கள் சிறிது தூரம் சென்றதும் மனைவி பின் தொடர்ந்து "எம்மை யாரிடம் விட்டுச் செல்கிறீர்கள்?" என வினவ, "அல்லாஹ்விடம்" என அவர்கள் பதிலளித்தார்கள். "அந்த அல்லாஹ்வை நானும் பொருந்திக் கொள்கிறேன்" என ஹாஜறா அவர்களும் கூறி தன்பாட்டில் திரும்பவே, இபுறாஹீம் (அலை) அவர்கள் இருவரையும் விட்டுவிட்டு தன் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

இதன்போது அல்லாஹ்வைத் தவிர தம்மை எவருமே கவனிக்கவில்லை என்பதை ஊகித்துக்கொண்ட நபி இபுறாஹீம் (அலை) அவர்கள், க.்.பாவின் திசை நோக்கி தம் இரு கரங்களையும் உயர்த்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"எமது இறைவனே!, நிச்சயமாக நான் என் சந்ததிகளை, மிக்க கண்ணியம் வாய்ந்த உன் வீட்டின் சமீபமாக வசித்திருக்கச் செய்து விட்டேன். அது விவசாயமற்றதொரு பள்ளத்தாக்கு. எங்கள் இறைவனே!, அவர்கள் (உன்னை) தொழுது கொண்டிருப்பதற்காக (அங்கு வசிக்கச் செய்தேன்) மனிதர்களின் ஒரு தொகையினரின் இருதயங்கள் அவர்களை நோக்கும்படி நீ செய்வாயாக! (பற்பல) கனி வர்க்கங்களையும் நீ அவர்களுக்கு ஆகாரமாக அளித்து விடுவாயாக! (அதற்கு) அவர்கள் (உனக்கு) நன்றி செலுத்துவார்கள்."** (14:37)

என பிரார்த்தித்து அவ்விடத்தை விட்டும் நகர்ந்தார்கள். தனிமையுற்ற அன்னை ஹாஜறாவும் தனயன் இஸ்மாயீலும் தம்மிடமிருந்த அச்சிறு தொகை உணவை உண்டனர். அவையும் தீர்ந்துவிடவே, தன் அன்பு மகன் பச்சிளம் குழந்தை தாகத்தால் வீறிட்டு அலற எதுவுமறியா அத்தாய், பக்கத்தே இருந்த "ஸபா" எனும் மலை நோக்கி ஓடி, அதன் மீதேறி தண்ணீர் தேடலானார்கள். அங்கு அது தென்படாத போது "மர்வா" மலைக் குன்றை நோக்கி ஓடி, அதிலேறி தண்ணீர் தேட அதிலும் தண்ணீர் கிடைக்கவில்லை. இவ்வாறு தண்ணீர் தேடி அவ்விரு மலைக்குன்றுகளிடையே ஓடும் ஏழாவது முறையின்போது, வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் தனது இறக்கையால் (இன்னுமொரு அறிவிப்பில் தனது குதியால்) நிலத்தில் அடிக்க அங்கிருந்து நீர் பீறிட்டு வந்தது.

அன்னை ஹாஜறாவின் இந்த மலையடிவாரங்களுக் கிடையிலான ஓட்டத்தை குறிப்பதே, இன்று, ஹாஜிகளால் ஏழு முறை ஓடப்படும் தொங்கோட்டமாக இருக்கின்றது,

அப்போது அந்நீரூற்றை அன்னை ஹாஜறா அவர்கள் கைகளால் அணை போட்டுத் தடுத்தார்கள். இதைப் பற்றி நபி (ஸல்) அவர்கள்

**"இஸ்மாயீலின் தாய் அதை தடுக்காது அவ்வாறே விட்டிருந்தால், அது சதா ஓடிக் கொண்டிருக்கும் நீரூற்றாக மாறி இருக்கும்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என கூறினார்கள்.

அவ்வேளை, ஜிப்ரீல் (அலை) அவர்கள் அன்னை ஹாஜறா (அலை) அவர்களை நோக்கி

**"பயப்பட வேண்டியதில்லை. இந்நீர் இத்துடன் நின்றுவிடக் கூடியதல்ல. இச்சிறுவனும் அவரின் தந்தையும் இவ்விடத்தில் அல்லாஹ்வின் ஆலயத்தை அமைப்பார்கள்."**

என கூறிச் சென்றார்கள்.

இப்படியே அன்னை ஹாஜறா (அலை) அவர்கள் அந்த நீர்நிலை அருகே தன் பாலகனுடன் தரித்திருக்க, பின்னர் நபி இபுறாஹீம் (அலை) அவர்கள் வந்து அவ்விருவரையும் நலன் விசாரித்துச் செல்வார்கள்.

இவ்வாறு இருக்கும் வேளை, ஷாம் பிரதேசத்திலிருந்து ஒரு குழு அப்பள்ளத்தாக்கின் வழியே தம் பிரயாணத்தை மேற்கொண்டிருந்தபோது, அங்கு வானில் பறவைகள் வட்டமிடு வதை கண்ணுற்று, நீரோ, மனித சஞ்சாரமோ அற்ற இந்தப் பகுதியில், பறவைகள் எதுவும் வாழ்வதற்கு அசாத்தியமான நிலையில், அந்தப் பறவைகள் எவ்வாறு இங்கு வந்தன? என தங்களுக்குள் அங்கலாய்த்துக் கொண்டு, அவர்களுள் இருவரை நிலைமையை அவதானித்து வர அவ்விடத்திற்கு அனுப்பினர்.

அவர்கள் இருவரும் வந்து நிலைமையை அவதானித்து, தங்கள் குழுவினரிடம் தாம் கண்டவற்றைச் சொன்னதும், அவர்கள் அனைவரும் அவ்விடம் வந்து "இத்தண்ணீர் யாருக்குரியது?" என அன்னை ஹாஜறாவை விளித்துக் கேட்டனர். "இது எனக்குரியதுதான்" என அன்னையார் பதில் கூற, "இங்கு குடியிருக்க எமக்கும் அனுமதி வழங்குவீர்களா?" என அக்குழுவினர் மீண்டுமொரு கேள்வியைக் கேட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலுக்காய் காத்து நின்றனர். “ஆம், தாராளமாக” என அன்னை அவர்கள் கூறியதை செவிமடுத்த அக்குழுவினர் அங்கேயே குடியிருந்துவிட்டு, தங்களது குடும்பத்தினருக்கும் விடயத்தை எத்தி வைத்தனர்.

இப்படியே, நாட்கள் பல நகர்ந்து மாதங்களாகி, அவை வருடங்களாகி, இஸ்மாயீல் (அலை) அவர்களும் வாலிப வயதை அடைந்த வேளை, அரபு மொழியையும் அக்குழுவினர் உதவியுடன் கற்றிருந்தார்கள். அவர்களுள் ஒரு பெண்ணையும் திருமணம் செய்து கொண்டார்கள். இந்நிலையில், தொண்ணூறு வயதை அடைந்த அன்னை ஹாஜறா அவர்கள் மரணமுற்று அங்கேயே நல்லடக்கமும் செய்யப்பட்டார்கள்.

(பத்ஹுல் பாரி 6/455)

இஸ்மாயீல் (அலை) அவர்கள் கி.மு. 1910 இல் பிறந்தார்கள் என மஸ்ஊதி போன்ற அரேபிய வரலாற்றாய்வாளர்கள் கருதுகின்றனர். அத்தோடு அதே ஆண்டிலேயே தம் பெற்றோருடன் மக்காவிற்குள் நுழைந்ததாகவும், “ஸம்ஸம்” தோற்றம் பெற்றதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். இஸ்லாமிய ஹிஜ்ரி ஆண்டில் இதை நோக்குகையில், நபி (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு சுமார் 4469 ஆண்டுகளுக்கு முன்னமே “ஸம்ஸம்” நீரூற்றின் தோற்றம் இடம் பெற்றிருக்கிறது என்றும் இற்றைக்கு சுமார் ஆறாயிரம் வருடங்கள் அதன் வரலாறு பழைமையானது என்றும் புரிந்து கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூர்ந்த "ஸம்ஸம்"

"ஸம்ஸம்" கிணறு நாளடைவில் தூர்ந்து, அதற்குரிய அனைத்து அடையாளங்களும் அழிந்து போயின. இதற்கான காரணத்தை அறிய முற்பட்ட ஆராய்ச்சியாளர்களுள் சிலர், இது தூர்ந்து போவதற்கு புவியியல் ரீதியான மாற்றமே காரணம் என்றனர். "யாகூதுல் ஹமவிய்யி" என்ற ஆய்வாளர் "அப்பிரதேசத்தில் ஏற்பட்ட மழையும் வெள்ளப் பிரளயமுமே மூல காரணம்" எனக் குறிப்பிடுகிறார்.

அங்கு வாழ்ந்த பல கோத்திரத்தினரும் புனித க. ்.பாவின் கண்ணியத்திற்கு களங்கம் விளைவிக்கும் வகையில் அதற்கு காணிக்கையாக வழங்கப்பட்ட பொருட்களை நியாயமின்றி புசித்ததுடன் பெரும் பாவங்கள் அனைத்தையும் புரிந்தனர். ஆதலால் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட வெள்ளப் பிரளயத்தால் மக்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், "ஸம்ஸம்" நீரூற்றும் தூர்ந்தது. அவர்களுள் "அம்று இப்னு அல் ஹாரித் அல்ஜுர்ஹமி" என்ற நல்மனிதர், "அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுமாறும், தடுக்கப்பட்ட செயல்களை தவிர்ந்து அவ்வால -யத்தின் புனிதத்துவத்தை பேணுமாறும் உபதேசித்ததுடன் தவறினால் இறை தண்டனை வரும், இந்தப் புனிதமிகு மக்கா கெட்டவர்களை தன்னுள் கொள்ளாது. உங்களை இங்கிருந்து வெளியேற்றிவிட எவரையாவது இறைவன் அனுப்புவான்" என்றும் எச்சரித்தார்.

அவரின் உபதேசத்திற்கு எவருமே செவி சாய்க்கவில்லை. அதன் பின் அவர்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேற்றப் பட்டனர். இவ்வேளையில் "ஸம்ஸம்" நீரூற்றும் தூர்ந்து போயிற்று என்றும் ஒரு சாரார் தம் கருத்தை முன் வைத்துள்ளனர். இன்னும் சிலர், "மக்காவின் அன்றைய தலைவராக இருந்த "மழாழ் இப்னு அம்று" என்பவர் தன் எதிரிகளுடனான யுத்தமொன்றில் தோல்வியுற்றபோது, தாம் அங்கிருந்து வெளியேற்றப்படுவோம் என அஞ்சி தன்னிடமிருந்த விலை மதிப்புள்ள செல்வங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸம்ஸம்" கிணற்றில் இட்டு மூடிவிட்டு, எமன் பிரதேசத்திற்கு தப்பிச் சென்றார். இதன் பின், அதன் அமைவிடம் தெரியாதவாறு தூர்ந்து போனது" எனக் குறிப்பிடுகின்றனர்.

இந்நிலையில் கடுமையான நீர் நெருக்கடிக்கு உள்ளான அப்பிரதேச மக்கள் ஒழுங்கான பருவ மழையோ, ஆறு, குளம், குட்டை போன்ற நீர் நிலைகளோ இல்லாததனால், தமது நீர்த் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு புதிய கிணறுகளை அமைக்கும் நிலைக்கும் உள்ளானார்கள். இவ்வாறு அமைக்கப்பட்டவைகள் அனைத்தும் மக்காவிற்கு வெளியிலேயே அமைந்திருந்தன.

இவைகளிலிருந்து, குறிப்பாக, "மைமூனுல் ஹழ்றமி" எனப்படும் கிணற்றிலிருந்து அப்துல் முத்தலிபின் பாட்டனார், குசை இப்னு கிலாப் நீர் சுமந்து வந்து அன்றைய ஹாஜிகளின் நீர்த் தேவைகளை பூர்த்தி செயதார். இதன் சிரமத்தை உணர்ந்த அவர், மக்காவில் வசித்த அபூதாலிப் அவர்களின் மகள் உம்மு ஹானி என்பவரின் வீட்டில் "அல்அஜூல்" என்ற பெயரில் ஒரு கிணற்றை அமைத்தார். இது மக்காவினுள் தோண்டப்பட்ட முதற் கிணறாகும்.

அவர் மரணித்த பின், அவர் புதல்வர், அப்துல் மனாபின் முதுமை வரை, அக்கிணறு பாவனையில் இருந்தது. என்றாலும், "ஜுஅய்ல்" கோத்திரத்து நபர் ஒருவர் அக்கிணற்றில் வீழ்ந்து விடவே, அன்றிலிருந்து அதுவும் மூடப்பட்டது. அதன்பின், ஒவ்வொரு கோத்திரத்தினரும் தங்களுக்கென தனியான கிணறுகளை அமைத்துக் கொண்டனர். அவர்களுள் தமீம், அப்துஷம்ஸ், ஹாஷிம் ஆகிய கோத்திரத்தினர் குறிப்பிடத்தக்கோர் ஆவார். அதேபோல் முர்ரத் இப்னு கஃபு, கிலாப் இப்னு முர்ரத் போன்ற குறைஷித் தலைவர்களின் கிணறுகளும் மிகப் பிரசித்தமானவை. இதன்போதே அப்துல் முத்தலிப் தேவை உணர்ந்து "ஸம்ஸம்" கிணற்றை மீள் நிருமாணம் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஸம்ஸம்" மீள் புணரமைப்பில் அப்துல் முத்தலிப்.

நாளடைவில், புனித க.்.பா ஆலயம், சிறந்த வர்த்தகம், புவியியல் அமைப்பு ஆகியவற்றால் புனித மக்கா மக்கள் மத்தியில் பெரும் மதிப்புப் பெற்று, பெரும் நகராக மாற்றமுறலாயிற்று.

அங்கு வாழ்ந்த மக்கள் குறிப்பாக, குறைஷியர் மிகவும் மதிக்கப்பட்டனர். அவர்கள் தம்மிடம் வழக்கில் காணப்பட்ட பதினைந்து வகையான பதவிகளையும் நியாயமான முறையில் வகுத்துக் கொண்டு மக்காவின் பரிபாலனத்தை முன் எடுத்தமையினால் அன்பு, நேசம், ஒற்றுமை என்பன அவர் களிடையே விரிவாக காணப்பட்டன. அப்பதவிகளில்,

1. அஸ்-ஸதானாஹ்
2. அஸ்-ஸிகாயாஹ்
3. அல்-றிபாதாஹ்

ஆகிய மூன்றும் முக்கியத்துவம் மிக்கவையாகும்.

01. "அஸ்-ஸதானாஹ்." இப்பதவியைப் பெற்றவர் புனித க.்.பா ஆலயத்திற்கு திரை இடுவதுடன், அவ்வாலயத்தின் திறவுகோலையும் தம் கைவசம் வைத்திருப்பார். மக்கள் தரிசனத்திற்காக, அதை திறப்பதுவும் பின் பூட்டுவதும் அவரே. இது மிகவும் கௌரவமிக்க பதவியாகும்.

02. "அஸ்-ஸிகாயாஹ்." இப்பதவி, ஹாஜிகளுக்கு நீர் புகட்டுவதற்குரியது. இதுவும் மிக மதிப்புக்குரிய ஒன்றே. இருந்தும் மிக கடினமானதுமாகும். ஏனெனில், மக்காவில் நீர் பற்றாக்குறை நிலவியமையால், மதுரமான நீர் இருக்கும் தூரப் பிரதேசங்களிலிருந்து, தோல்பைகளில், ஒட்டகங்களின் உதவியுடன், க.்.பா ஆலயத்திற்கு எடுத்து வந்து வழங்குவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. "அர்-றிபாதாஹ்." ஹஜ்ஜுக் காலங்களில் பொருட்கள் சேகரித்து புனித க.்.பாவை தரிசிக்க வரும் ஏழை ஹாஜிகளை, அல்லாஹ்வின் விருந்தினர் எனக் கருதி, அவர்களுக்கு உணவளிப்பதை இப்பதவி குறிக்கின்றது.

குறைஷிக் கிளை குஸை இப்னு கிலாப் என்பவர் இம் மூன்று பதவிகளையும் தன்னகத்தே கொண்டிருந்தார். இவரின் மறைவின் பின், இவை மூன்றும் மகன் அப்துத்தார் கைவசமாயின. இவரின் பிள்ளைகள் மூலம் அவைகள் அவர்களிடையே பங்கிட்டுக் கொள்ளப்பட்டன. இவ்வாறு கால மாற்றத்திற்கேற்ப கைமாறிய இப்பதவிகளில் "அஸ்-ஸிகாயாஹ்" எனும் பதவி நபி (ஸல்) அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்களிடம் கிடைத்தது.

"ஸம்ஸம்" கிணறு இவ்வேளை, முற்றாக அடையாளம் அற்று தூர்ந்து போயிருந்தமையால், தம் வசமாகிய இப்பணியை அவர் நிறைவேற்றுவதில் பெரும் சிரமத்திற்கு உள்ளானார். இதன்போது தூக்கத்தில் அந்நீரூற்று பற்றி ஒரு கனவு தோன்றியது. இதனை அடியொற்றி "ஸம்ஸம்" கிணற்றை மீண்டும் தோண்டினார்கள். இச்செய்தியை வரலாற்று ஆய்வாளர்களும் ஹதீஸ் கலை வல்லுணர்களும் குறிப்பிடுகின்றனர்.

இவ்வேளை க.்.பாவை அழிப்பதற்கு யானைப் படை, ஆப்ரஹாவின் தலைமையில் மக்காவை நோக்கி வந்தபோது, குறைஷிகள் அனைவரும் அங்கிருந்து அச்சத்தினால் அகன்று விட்டனர். என்றாலும், இளைஞனாக இருந்த அப்துல் முத்தலிப் "என்ன நேர்ந்தாலும் க.்.பாவை விட்டு நான் வெளியேறமாட்டேன்" என சூளுரைத்து, அங்கேயே தன்னந்தனியே வீற்றிருந்தார். யானைப்படை முற்றாக அல்லாஹ்வால் அழிக்கப்பட்ட செய்தி கேட்டு குறைஷிகள் திரும்ப வந்த வேளை, அங்கு அப்துல் முத்தலிப் வீற்றிருப்பதைக் கண்டனர். இவ்வாண்டு "ஆமுல் பீல்" யானை ஆண்டு என அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுறுதிமிகு செயலினால் அப்துல் முத்தலிபின் கண்ணியமும் கௌரவமும் அம்மக்களிடையே மேலோங்கி இருந்தபோது, தனக்கு பிறந்த மூத்த புதல்வனுக்கு அல்-ஹாரித் என பெயர் சூட்டினார்.

க..பாவை தரிசிப்பதற்காக வரும் ரஹ்மானின் விருந்தினருக்கான நீர் புகட்டும் பணியால் சிரமப்பட்டுக் கொண்டிருந்தவரும், தனது உறுதிமிக்க செயலினால் புகழின் உச்சியை அடைந்தவருமான அப்துல் முத்தலிப் ஒரு தினம், "ஸம்ஸம்" நீரூற்று பற்றியும் அது அமைந்திருக்கும் இடத்தின் அடையாளத்தைப் பற்றியும் விளங்கப்படுத்தி, அதனை மீண்டும் புனர் நிருமாணம் செய்யும்படி ஒரு கனவில் வேண்டப்பட்டார். இதனால் உந்தப்பட்ட அப்துல் முத்தலிப், புனர் நிருமானத்தின் முதற் கட்டமாக, அக்கிணற்றை தோண்டும் பணியில் ஈடுபட்டார்.

இதனை கண்ணுற்ற குறைஷியர், "என்ன மடத்தனமான வேலை புரிகின்றீர்கள்? நீங்கள் மந்த புத்தி உள்ளவரல்லவே! நம் பள்ளியை போட்டு தோண்டுகிறீர்களே!" என்றவாறாக அவரிடம் அங்கலாய்த்ததற்கு, "இப்பணியை தடுக்க முயற்சிப்பவருடன் போரிட்டாயினும் செய்து முடிப்பேன்." என சூளுரைத்து, தமது வேலையில் தொடர்ந்து மும்முரமாக ஈடுபட்டார்கள். இதில் "ஆமுல் பீல்" என அழைக்கப்படும் யானை ஆண்டில் பிறந்த அவரது ஒரேயொரு புதல்வர் ஹாரிதும் அவருக்கு உதவினார்.

இவ்விடயத்தில் குறைஷியர் இரு சாராராக பிளவுண்டனர். ஒரு சாரார், அவர்கள் இருவரையும் மடயர்கள் என கூறியதுடன், அவர்களுடன் தருக்கித்து சண்டையும் செய்தனர். மற்றைய சாரார், அப்துல் முத்தலிப் அவர்களிடம் குடிகொண்டிருந்த இறைபக்தி, தியாக உணர்வு ஆகிய நற்பண்புகளால், அவர் பெற்றிருந்த கண்ணியத்திற்கு மதிப்பளித்து, அவரது இச்செயல் பற்றி மௌனம் காத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணறு தோண்டும் பணி மிகச் சிரமமாகவும் சங்கடமாகவும் இருந்ததனால், தனக்கு மேலும் அதிக பிள்ளைகள் இருந்தால், உதவியாக இருப்பார்கள் என்று கருதிய அப்துல் முத்தலிப், தனக்குப் பத்துப் பிள்ளைகள் கிடைத்தால் அவர்களுள் ஒருவரை அறுத்துப் பலியிடுவதாக நேர்ச்சை செய்து கொண்டு பணியில் மும்முரமாக ஈடுபட்டார்.

அதனுள் ஏற்கனவே புதைக்கப்பட்டிருந்த வாட்கள் சில இதன்போது கிடைத்தன. இதனை அறிந்த குறைஷிகள் அவற்றில் தங்களுக்கும் பங்குண்டு என வாதாடியதற்கு "இவைகள் அனைத்தும் க.்.பாவுக்குச் சொந்தமானவை. அவைகளை நான் அதற்கே ஒப்படைப்பேன்." என எடுத்துக் கூறி, தொடர்ந்து நீர் கிடைக்கும் வரை தம் பணியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டனர்.

இதனிடையே ஏற்பட்ட நீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக அங்கு ஓர் தற்காலிக நீர்த் தொட்டி அமைத்து, தந்தையும் தனயனுமாய் அதை நிறைத்து வைத்து, ஹாஜிகளுக்கு நீர் புகட்டிக் கொண்டிருந்தார்கள். பொறாமை கொண்ட குறைஷியர்களுள் சிலர் நடுநிசியில் அத்தொட்டியை சிதைத்து விடுவதும் காலையானதும் பொறுமையுடன் அப்துல் முத்தலிப் அவர்கள் அதை சீர்படுத்துவதும் வழக்கமாக இருந்தது. பொறாமையரின் ஈனச் செயல் சகித்துக் கொள்ள முடியாத அளவு எல்லை மீறியபோது, அவர் அவர்களுக்கு எதிராக இறைவனைப் பிரார்த்தித்தார். இதன்பின், தொட்டியை சேதப்படுத்த முனைந்தவர்களுக்கு ஒருவித நோய் தொற்றலாயிற்று. இதனால் அவர்களது ஈனச்செயல் விடுபட்டது.

சற்று காலம் தாழ்த்தி அப்துல் முத்தலிப் அவர்கள் இன்னொரு பெண்ணை திருமணம் செய்ததன் மூலம் தான் செய்த நேர்ச்சைக்கு ஏற்றாற்போல் பத்துக் குழந்தைகளுக்குத் தந்தையானார்கள். இதன்போது தான் முன்னர் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ச்சையை நினைவு கூர்ந்து, "இறைவா! இப்பத்துப் பிள்ளைகளுள் நான் செய்த நோச்சையை நிறைவேற்றுவதற்கு, ஒருவரை தேர்வு செய்ய சீட்டுக் குலுக்குகின்றேன். நீ உனக்கு விரும்பியவரை எனக்குத் தெரிவு செய்து தருவாயாக!" எனப் பிரார்த்தித்து, சீட்டுக் குலுக்கிய வேளை, அவருக்கு மிகவும் நேசத்திற்குரிய மகன் அப்துல்லாஹ் என்பவரது பெயரே தெரிவானது.

அப்துல்லாஹ்வை பலியிட மனம் கொள்ளாத அவர்கள் "இறைவா! இவனே எனது பாசத்திற்குரியவன். இவனையே அறுக்கவா? அல்லது பதிலாக நூறு ஒட்டகங்களை அறுத்துப் பலியிடட்டுமா? என வினவி பிரார்த்தித்து விட்டு சீட்டு குலுக்கியபோது, நூறு ஒட்டகங்களை பலியிடுவதற்கு முடிவானது. இதற்கமைய தம் நேர்ச்சையை நிறைவேற்றிக் கொண்டார்கள்.

மேற்கூறிய விதமான இந்த வரலாற்று நிகழ்வை "அல்-அஷ்ரகீ" என்பவர் தனது நூலில் பதிவு செய்துள்ளார். இதுபற்றி அலி (ரழி) அவர்கள் அறிவிக்கும் இன்னொரு வகையிலமைந்த வரலாற்றுக் குறிப்பும் உள்ளது. அது வருமாறு...

அப்துல் முத்தலிப் அவர்கள் கூறுகிறார்கள். "நான் ஒரு தினம் தூங்கிக் கொண்டிருக்கும் வேளை, ஒருவர் என்னிடம் வந்து "தய்யிபா"வை தோண்டும் என்றார். அது புரியாத நான் "தய்யிபா" என்றால் என்ன? என கேட்க, அவர் ஏதும் கூறாது மறைந்து விட்டார். மறுதினம் தூங்கிக் கொண்டிருக்கையில், அதே நபர் மீண்டும் வந்து, "புர்ரா(த்)வை தோண்டும் எனக்கூற, நான் "புர்ரா(த்) என்றால் என்ன?" என கேட்க, அவர் எதுவும் கூறாது சென்று விட்டார். பின்னர் அதற்கடுத்த தினம் தூங்கும்போது, அதே நபர் வந்து ""ஸம்ஸம்"மை தோண்டும்" என்றார். அதற்கு நான் ""ஸம்ஸம்" என்றால் என்ன?" என விளக்கங்களைக் கேட்டேன். வந்த அந்நபர் சகல அடையாளங்களையும் காட்டி விளக்கி விட்டு மறைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையும் தனயனுமாக கனவில் கூறப்பட்ட அடையாளங்களின் அடிப்படையில், குறித்த இடத்தை அடையாளப்படுத்திக் கொண்டு தோண்டும் பணியில் ஈடுபட்டபோது, குறைஷியர்களால் பல இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்டனர். அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது, தம் பணியில் இறுதி இலக்கை அடையும் வரை மும்முரமாக செயற்பட்டனர்.

"ஸம்ஸம்" கிணறு தூர்ந்து போனதன்பின் அப்துல் முத்தலிப் அவர்கள் மீண்டும் தோண்டி புனர் நிருமாணம் செய்த விதம் பற்றி, மேலுள்ளவாறு பல்வேறு விதத்தில் வரலாற்றுக் குறிப்புகள் விதைந்துரைத்த போதிலும், அவர்தான் தோண்டி புனர் நிருமாணம் செய்தார்கள் என்பதில் அவை அனைத்தும் ஒன்றுபடுகின்றன.

எனவே தூர்ந்து போயிருந்த அக்கிணற்றை அப்துல் முத்தலிப் அவர்களே மீண்டும் தோண்டி புனர் நிருமாணம் செய்தார்கள் என்ற முடிவுக்கு இணங்கிச் செல்ல அனைத்து வரலாற்றுக் குறிப்புக்களும் எம்மை நிர்ப்பந்திக்கின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொங்கிப் பிரவாகமெடுக்கும் 'ஸம்ஸம்' ஊற்றுக் கண்கள்.



பொங்கிப் பிரவாகமெடுக்கும் 'ஸம்ஸம்' ஊற்றுக் கண்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஸம்ஸம்" நீரூற்றினது தொன்மை.

"ஸம்ஸம்" நீர், நபி இபுறாஹீம் (அலை) அவர்களுக்காக வேண்டியே தோற்றம் பெற்றது என்ற அந்த காலக் கணிப்பீட்டை, ஆய்வு செய்ய முற்பட்ட வரலாற்றறிஞர்கள், அதன் தோற்றக் காலம் சுமார் ஆறாயிரம் வருடங்கள் பழைமை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என கருத்துக் கூறுகின்றனர்.

ஏனெனில், நபி இபுறாஹீம் (அலை) அவர்கள் பிறந்து இரண்டாயிரம் வருடங்கள் கடந்த பின்னரே, நபி மூஸா (அலை) அவர்கள் பிறந்துள்ளார்கள். இதற்குப் பின்னர் ஆயிரத்து தொள்ளாயிரம் வருடங்களின் பின்பே, நபி ஈஸா (அலை) அவர்கள் தூதுவராக அனுப்பட்டிருக்கிறர்கள். இந்த ஈஸா (அலை) அவர்களுக்கான தூதுத்துவம் வழங்கப்பட்டு ஐநூற்று அறுபத்து ஒன்பது வருடங்கள் கழிந்த பின்னரே, இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் தூதுவராக தேர்ந்தெடுக்கப் பட்டார்கள் என வரலாற்றாசிரியர்கள் கூறி கால அளவை விளக்கியுள்ளனர்.

ஹிஜ்ரத்திற்கு முன் நபி (ஸல்) அவர்கள் ஐம்பத்து மூன்று ஆண்டுகள் மக்காவில் வாழ்ந்தார்கள். அத்தோடு இன்று ஹிஜ்ரி ஆயிரத்து நாநூற்று முப்பத்து நான்கு வருடங்கள் ஆகும். இவ்வாறு, இற்றை வரைக்கும் மொத்தமாக, ஐயாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஆறு (5956) வருடங்களாகும் என வரலாற்றாசிரியர்கள் விபரம் கூறி விளக்கியுள்ளனர். அல்லாஹ் மிக அறிந்தவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஸம்ஸம்" கிணற்றின் கட்டமைப்பு.

"ஸம்ஸம்" கிணற்றின் கட்டமைப்புத் தோற்றம் இரு பகுதிகளாக வகுத்து நோக்கப்படுகின்றது. ஒன்று, கற்கள் கொண்டு கட்டப்பட்டுள்ள வாயிற் பகுதியும், மற்றையது, அதிலிருந்து கல்மலையின் ஊடாக குடையப்பட்டுள்ள பகுதியுமாகும்.

கற்கள் கொண்டு நிருமாணிக்கப்பட்டுள்ள பகுதி 12.80 மீட்டர் ஆழத்தையும், குடையப்பட்டுள்ள மற்றைய பகுதி 17.20 மீட்டர் ஆழத்தையும் பெற்று, அதன் மேற் பரப்பிலிருந்து 30 மீட்டர் ஆழத்தை தன்னகத்தே கொண்டுள்ளது.

கிணற்றின் மேற்பகுதியிலிருந்து 4 மீட்டர் தூரத்தில் தண்ணீர் காணப்படுகிறது. அதன் நீரூற்றுகள் கிணற்று வாயிலிருந்து 13 மீட்டர் ஆழத்தில் காணப்படுகின்றன. மேலும் அதிலிருந்து 17 மீட்டர் ஆழம் கீழ் நோக்கியும் காணப்படுகிறது.

மூன்றாம் நூற்றாண்டிலும் அதற்கு முந்தைய காலப்பகுதிகளிலும் "ஸம்ஸம்" கிணற்றில் பாரிய மூன்று பிரதான நீரூற்றுகள் காணப்பட்டன என்று கூறப்படுகின்ற போதிலும், பொறியியலாளர் யஹ்யா கூஷ்க் அவர்களால் ஹிஜ்ரி ஆயிரத்து நானூறாம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவு பின் வருமாறு விபரித்துக் குறிப்பிடுகின்றது.

புனித கஃபாவின் "ஹஜ்றுல் அஸ்வத்" கல் அமைந்துள்ள திசையிலிருந்து அதிக நீர் கொப்பளித்துப் பாய்கின்ற நாற்பத்தைந்து சென்றி மீட்டர் நீளத்தையும் முப்பது சென்றி மீட்டர் அகலத்தையும் கொண்ட நீரூற்றொன்றும் எழுபது சென்றி மீட்டர் நீளத்தையும் முப்பது சென்றி மீட்டர் அகலத்தையும் கொண்ட மற்றுமொரு நீரூற்றுமாக, இரு பெரு நீரூற்றுகளுடன் இருபத்தியொன்றுக்கு மேற்பட்ட சிறுசிறு நீரூற்றுகளும் அதனுள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்மன் உமர் கோஷ்க் என்ற சவூதி அரேபிய ஆய்வாளர் சொல்லும் கருத்தும் இங்கு குறிப்பிடத்தக்கது.


"ஸம்ஸம்" நீருக்கு இரு பெரும் ஊற்றுக் கண்கள் உள்ளன. அவற்றில் ஒன்று ஹஜறுல் அஸ்வத் திசையிலிருந்து வரும் 45 சென்றி மீற்றர் நீளத்தையும் 30 சென்றி மீட்டர் அகலத்தையும் உடைய ஊற்றுக்கண் அது. அதிலிருந்தே தண்ணீர் பீறிப் பாய்கிறது. மற்றயது தற்போது அதான் சொல்லப்படும் திசையிலிருந்து வருகிறது. அதன் நீளம் 70 சென்றி மீட்டராகும். அதனுள்ளே இரு நீரூற்றுகள் பிரிகின்றன. அதன் உயரம் 30 சென்றி மீட்டர். முதலாவது ஊற்றுக் கண்ணுக்கு சமீபமாக அபூகுபைஸ் மலைப் பகுதியிலிருந்து வரும் 21 ஊற்றுக் கண்கள் காணப்படுகின்றன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஸம்ஸம்" கிணற்றின் கட்டமைப்பு.




**அளவுகள் யாவும் மீற்றர் (M) அளவாகும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஸம்ஸம்" கிணற்றின் இன்றைய நிலை.

"ஸம்ஸம்" கிணறு புனித க.்.பாவிற்கு அருகாமையில் அமைந்திருக்கிறது. காலப் போக்கில் அது மாற்றங்களுக்குட் படுத்தப்பட்டு பல படித்தரங்களாக முன்னேற்றம் கண்டு வந்துள்ளது. குறிப்பாக, கலீபாக்களான ஹாரூன் அல்-றஷீத், அல்-மஹ்தி ஆகியோரது காலங்களிலும் பல அடிகள் ஆழமாக தோண்டப்பட்டதாக வரலாறுகள் குறிப்பிடுகின்றன.

ஆரம்ப காலங்களில் அதன் மேற்பகுதி நிலத்திற்கு மேல் தெரியுமாறு அமைந்திருந்தது. இதனால், க.்.பாவை "தவாபு" செய்வதில் மக்கள் பல அசௌகரியங்களுக்கு உட்பட்டனர். அதனால், கலீபா மு.்.தஸிம் அவர்களது ஆட்சிக் காலத்தில் மேற்பகுதி முற்றிலுமாக மறைக்கப்பட்டது. ஹிஜ்ரி ஆயிரத்து முன்னூற்று எழுபத்து ஏழில் அதன் மேற்பகுதி, நிலமட்டத்தோடு சமப்படுத்தப்பட்டு, "ஸம்ஸம்" கிணற்றடிக்கு செல்வதற்காக, நிலக்கீழ் அடியிலான சுரங்கப் பாதை ஒன்று அமைக்கப்பட்டது.

இதன் மூலம், க.்.பாவை தவாபு செய்பவர்களுக்கு மிக இலகுவான முறையில் ஈடுபட வசதி ஏற்பட்டதோடு, "ஸம்ஸம்" கிணற்றுக்கு செல்வோருக்கும் மிக எளிதாக சென்று வரவும் வாய்ப்பு ஏற்பட்டது.

இன்றுவரை ஆட்சிபீடமேறிய தலைவர்கள், குலபாக்கள், அரசர்கள் அனைவரும் காலத்துக் கேற்றவாறு அதனைச் சீர் செய்து செப்பனிட்டு பாதுகாத்து வந்தனர். இந்த வரிசையில் சவூதி அரேபிய நாட்டை தன் ஆழுகையின் கீழ் கொண்டு வந்த மன்னர் அப்துல் அஸீஸ் பின் அப்துர் ரஹ்மான் ஆலசுஊத் (ரஹ்) அவர்களோ இக்கிணற்றில் மிகவும் அக்கறை காட்டி செயற்பட்டார் என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

அவர் அக்கிணற்றை எண்ணைவள அமைச்சுக்குக் கீழ் கொண்டு வந்து இதையே முதலாவது இலக்க கிணறாகவும் பிரகடணப்படுத்தியதோடு அதனை அழகு படுத்துவதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பதிலும் முழுக் கவனத்தையும் செலுத்தினார். உலகிலேயே சாதாரண தண்ணீர் கிணறொன்றை எண்ணை வள அமைச்சுக்குக் கீழ் கொண்டு வந்த ஒருவர் இவரே.

தமக்குக் கிடைத்த பாரிய சமூக சமய வளமாக அக்கிணற்றைக் கருதி, அவருக்குப் பின் அவரது புதல்வர்களான மலிக் சுஊத். மன்னர் பைஸல், மன்னர் காலித், மன்னர் பஹ்த் (ரஹ்) போன்றவர்களும் பெரும் சிரத்தை எடுத்து பணிகளை மேற்கொண்டு அதைச் செப்பனிட்டனர்.

இவ்வாறு "ஸம்ஸம்" கிணறு, அவ்வப்போது, பல அபிவிருத்திகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்தபோதிலும், கஃபாவை தரிசிக்க வரும் பெரும் தொகையானோரும் "ஸம்ஸம்" நீரை மிக இலகுவாக அருந்தவும், எடுத்துச் செல்லவும் வழிவகை செய்யப்பட வேண்டும் என்ற உயர் நோக்கம் கொண்ட, தற்போதைய சவூதி அரேபிய மன்னர் அவர்களது காலத்திலேதான் அது மிகவும் கவர்ச்சிகரமான விரிவாக்கலுக்கு உட்படுத்தப்பட்டு, இன்று மிக அழகிய தோற்றத்தில் சௌகரியம் நிறைந்ததாக காணப்படுகிறது.

மன்னர் அப்துல்லாஹ் பின் அப்துல் அஸீஸ் அவர்கள் "மஷ்ரூஉல் மலிக் அப்துல்லாஹ் பின் அப்துல் அஸீஸ் லிசுக்யா "ஸம்ஸம்" (மன்னர் அப்துல்லாஹ் இப்னு அப்துல் அஸீஸ் ஸம்ஸம் நீர் விநியோகத் திட்டம்) என்ற பெயரில் "ஸம்ஸம்" கிணற்றை விரிவுபடுத்தும் பாரிய அபிவிருத்திப் பணியொன்றை புனித மக்காவிலிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்திலிருக்கும் "குதை" என்ற பிரதேசத்தில் ஹிஜ்ரி 1431 துல்கஃதா மாதம் பிறை எட்டில் (2010 ஒக்டோபர் 16) ஆரம்பித்து வைத்தார்.

சுமார் 700 மில்லியன் சவூதி றியால்கள் செலவில் நவீன இயந்திரங்களின் உதவியுடன் 13405 சதுர மீட்டர் பரப்பைக் கொண்ட இடத்தில் மேற்கொள்ளப்பட்ட இச்செயற் திட்டத்தின் நோக்கம் "ஸம்ஸம்" நீரை புதிய யுகத்திற்கேற்ப நாகரிகமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் அதனை பொதி செய்து எவருக்கும் இல்லை என்று கூறாது விறியோகிப்பதாகும்.

தற்போது பொருத்தப்பட்டுள்ள பாரிய வலு கொண்ட இயந்திரங்களின் மூலம் ஒரு நாளைக்கு சுமார் 5 மில்லியன் (50 இலட்சம்) லீட்டர் "ஸம்ஸம்" நீர் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டு 10 மில்லியன் (ஒரு கோடி) லீட்டர் கொள்ளக்கூடிய தண்ணீர் தாங்கியில் நீர் சேகரிக்கப்படுகிறது.

இங்கிருந்து 200 மில்லி மீட்டர் பருமன் கொண்ட நாலு பாரிய உருக்குக் குழாய்கள் மூலமாக ஹரம் ஷரீபுக்கு அனுப்பப்படும் நீர் 10 லீட்டர் அளவு கொண்ட இரண்டு இலட்சம் போத்தல்களில் நிரப்பப்பட்டு, இருபது இலட்சம் லீட்டர் நீர் ஹரம் ஷரீபுக்குள் பொதுமக்களின் தாகம் தீர்க்க வைக்கப்படுகிறது.

இந்த அண்மைய பாரிய நீர் வினியோகச் செயற் திட்டத்தின் கட்டமைப்பும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. காற்றமுக்கத்தை சீர்செய்யும் நிலையம், வெற்றுப் போத்தல்களுக்கான களஞ்சியசாலை, நீர் அடைக்கப்பட்ட இரண்டு இலட்சம் போத்தல்களுக்கான களஞ்சியசாலை, உற்பத்தி திட்டமிடலுக்கான கட்டிடம், அவசர தேவைக்கு உபயோகிப்பதற்காக 10 மெகாவோட் வலு கொண்ட மின் பிறப்பாக்கி (***Generator***) இயந்திரத்திற்கான கட்டிடம், கிணற்றிலிருந்து நீர் எடுப்பது முதல் போத்தலில் அடைக்கும் வரை அனைத்தையும் கண்காணிக்கின்ற மண்டபம், அடைக்கப்பட்ட போத்தல்களை சேமித்து வினியோகிக்கும் நிலையம் என பல கட்டிடத் தொகுதிகளைக் கொண்ட அத்தொழிற்சாலை மனித செயற்பாடுகள் எதுவுமின்றி முற்றிலும் இயந்திரமயமாக்கப்பட்டுள்ளது.

மேலும் 75 மில்லியன் றியால்கள் ஒதுக்கப்பட்டு குளிரூட்டல் ஒழுங்குகள், அபாய எச்சரிக்கை, தீயணைப்பு போன்ற அனைத்தும் செப்பனிடப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “ஸம்ஸம்” நீரின் மகிமைகள்.

முஹம்மது (ஸல்) அவர்களது இருதயம் “ஸம்ஸம்” நீர் கொண்டு பலமுறை கழுவப்படதாக குறிப்பிடும் தகவல்கள் புகாரி, முஸ்லிம் போன்ற ஹதீஸ் நூற்களில் பதியப்பட்டுள்ளன. எனவே, இதன் மூலம் அந்நீர் ஏதோ ஒரு வகையில் சிறப்புப் பெற்றதென்பதை மிக தெளிவாகவே உணர முடிகின்றது.

**“புவிப் பரப்பின் நீர் நிலைகளுள் மிகச் சிறந்தது “ஸம்ஸமே””**

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரழி)
நூல் : இப்னு ஹிப்பான், தபறானீ, சுயூத்தி.

**““ஸம்ஸம்” நீர் அருந்தப்படுவதன் நோக்கம் நிறைவுறும்”**

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரழி)
இப்னு உமர் (ரழி), ஜாபிர் (ரழி)
நூல் : அஹ்மத், இப்னு மாஜா, பைஹகீ, தாரகுத்னீ

ஆகிய நபிமொழிகளை விளங்கிக் கொண்ட நபித் தோழர்கள், தாபிஈன்கள், தபஉத் தாபிஈன்கள், இமாம்கள், நல்லவர்கள், அறிஞர்கள் அனைவரும் தத்தமது எண்ணங்கள் நிறைவுறுவதற்கு அதை அருந்தி, இறைவனிடம் பிரார்த்தித்ததுடன் அதில் வெற்றியும் பெற்றனர்.

“வேதத்தை உடையவர்கள் (கிறிஸ்தவர்கள்) இந்நீர் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்தனர். ரோம் நாட்டுக்கு நாங்கள் சென்றபோது இரவு நேரமென்பதால் அங்கொரு கோயிலில் தங்க வேண்டி ஏற்பட்டது. “உங்களில் மக்கா வாசிகள் யாராவது இருக்கிறீர்களா?” என அக்கோவில் பாதிரியார் கேட்டார், ஆம் என்றதும் ““ஸம்ஸம்” கிணற்றுக்கும் ஹஜறுல் அஸ்வத் கல்லுக்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு?” எனக் கேட்டார். தெரியாதென்றேன். “அது ஹஜறுல் அஸ்வத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழிருந்துதான் ஊற்றெடுக்கிறது. என்னிடம் இருக்கும் கூசா நிறைய தங்கம் இருப்பதைவிட அது நிறைய "ஸம்ஸம்" நீர் இருப்பதை நான் விரும்புகிறேன்" என்று அவர் கூறினார் என ஜ.ஃபர் அத்தாபியீ அல்மக்கீ என்பவர் குறிப்பிடுவதாக தனது மக்காவின் வரலாறு என்ற நூலில் பாகிஹீ என்ற வரலாற்றாசிரியர் குறிப்பிடுகிறார்.

"ஸம்ஸம்" நீரின் சிறப்புப் பற்றி ஏராளமான நபிமொழிகள் வந்துள்ளதால் அந்நீரைவிட சுத்தமான, தெளிவான ஒரு நீர் இப்புவிப் பரப்பில் எங்குமே காணமுடியாது என மக்காவைச் சேர்ந்த சல்மான் அஸ்ஸலமி என்ற அறிஞர் குறிப்பிடுகிறார்.

"ஸம்ஸம்" நீர் பரிசுத்தமானது அற்புதங்கள் நிறைந்தது என்பது வாய்வழிக் கதைகளோ இதிகாசங்களில் கூறப்பட்ட செய்திகளோ, எவருக்கும் புரியாத மறைவான செய்தியோ அல்ல். மாறாக நவீன அறிவியல் தொழில்நுட்ப சாதனங்களின் மூலம் நிறுவப்பட்ட விடயமாகும்.

""ஸம்ஸம்" கிணறு அமைந்திருக்கும் புனித க.ஃபா ஆலயம் அமைந்துள்ள இடம் கடல் மட்டத்தைவிட மிகவும் கீழ் மட்டத்தில் இருப்பதனாலும், அக்கிணறோ மக்காவின் மத்தியில் அமைந்திருப்பதனாலும் மக்காவின் கழிவு நீர் இதை வந்தடைவதற்கு ஏதுவாகிறது என்பதனாலும் "ஸம்ஸம்" நீர் குடிப்பதற்கு பொருத்தமற்றது" என்றொரு செய்தியை ஒரு கலாநிதி 1971 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

இதனை அறிந்த மன்னர் பைஸல் (றஹிமஹுல்லாஹு) அவர்கள், உடனடியாக இதனை தனது கவனத்தில் கொண்டு, இதற்காக ஒரு குழுவை நியமனம் செய்து, இந்நீரை ஆராய்ச்சி செய்யுமாறு உத்தரவிட்டதற்கிணங்க, அந்நீர் ஐரோப்பிய ஆய்வு கூடங்களுக்கு அனுப்பப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் மாசுமறுவற்ற நீர் என நிரூபிக்கப்பட்டு புகழாரம் சூட்டப்பட்டதுடன் அந்தக் கலாநிதியின் கூற்றும் பொய்யானது என நிரூபிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை அறிந்த மன்னர் பைஸல் றஹிமஹுல்லாஹ் சந்தோச மிகுதியினால் இதனை பத்திரிகைகளில் பிரசுரித்ததை அறிய முடிகின்றது. அல்லாஹ்வின் அருட் கொடையான இப்புனித நீர் கியாம நாள்வரை அற்புதமாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. இன்ஷா அல்லாஹ்!

அதை வயிறார அருந்துவது நபிவழியாகும். இச்செயல் உள்ளத்தின் இறையச்சத்திற்கு சான்று பகரக்கூடியதும் நயவஞ்சகத்தை வேரறுக்கக் கூடியதுமாகும்.

சாமி அன்காவீ என்ற பொறியிலாளர் "நாம் "ஸம்ஸம்" நீரை கிணற்றிலிருந்து பல்வேறு நீர் இறைக்கும் இயந்திரங்களின் உதவியுடன் இறைத்தபோது ஒரு நிமிடத்திற்கு இருபத்து ஓராயிரம் லீடர் தண்ணீர் இறைத்தும் அதனை வற்ற வைக்க முடியாமல் போனது" என குறிப்பிடுகிறார்.

மற்றொரு அறிஞரான அமெரிக்க வாஷிங்டன் பல்கலைக் கழகத்தில் சுற்றாடல் ஆய்வுகளில் கற்கையை முடித்த கலாநிதி கோஷ்க் கூறுகையில், "நான்கு நீர் இறைக்கும் பாரிய இயந்திரங்கள் பொருத்தி 24 மணித்தியாலங்கள் தொடராக இறைத்த பொழுது ஒரு நிமிடத்திற்கு 8000 லீடர் இறைக்க முடிந்தது. அப்போது நீரின் சராசரி அளவு 3.23 மீடராக இருந்தது. அரை நிமிடத்திற்கொருமுறை நாம் அதனை அவதானித்துக் கொண்டிருந்தோம்."

"இயந்திரங்களை நிறுத்தியபோது 11 விநாடிகளில் கிணறு வழமையான அளவுக்கு நீரினால் நிறைந்தது. எவரது கற்பனைக்கும் எட்டாத இந்நிகழ்வை எனது வாழ்நாளில் மறக்க முடியாதுள்ளது. மேலும் பாங்கொலி போன்று அது பீறிப்பாயும் சத்தத்தைக் கேட்டேன் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஸம்ஸம்" நீரினால் நபியவர்களது இதயம் கழுவப்பட்டமை.

"நான் மக்காவில் இருக்கும்போது, எனது (வீட்டுக்) கூரை திறக்கப்பட்டது. (அதன் வழியாக) ஜிப்ரீல் (அலை) இறங்கி எனது நெஞ்சைப் பிளந்தார். பிறகு, அதை "ஸம்ஸம்" நீரால் கழுவினார். பின்னர் ஈமானும் ஞானமும் நிரம்பிய தங்கத் தட்டு ஒன்றை கொண்டு வந்து, அதிலுள்ளதை என் நெஞ்சில் நிரப்பி, நெஞ்சை மூடினார். பிறகு, என் கையை பிடித்து முதல் வானத்திற்கு ஏற்றிச் சென்றார். முதல் வானத்தின் காவலரிடம், "திறப்பீராக" என்றார். "தட்டுவது யார்?" என அக்காவலர் கேட்க, 'ஜிப்ரீல்' என்று ஜிப்ரீல் (அலை) கூறினார்."

அறிவிப்பவர் : அபூதர்தா (ரழி)
நூற்கள் : புகாரி, முஸ்லிம், அஹ்மத்.

இந் நபிமொழி நபியவர்களின் விண்ணுலக யாத்திரையோடு சம்பந்தப்பட்டதாக இருப்பதுடன், அவர்கள் அப்பயணத்தை மேற்கொள்ளு முன், அவர்களது இருதயம் "ஸம்ஸம்" நீரினால் பரிசுத்தப்படுத்தப்பட்டமையையும் நமக்கு எடுத்தியம்புகிறது.

சுவர்க்கம், நரகம், வானம், பூமி ஆகியவற்றை அவதானிக்கச் செல்லும் ஒருவரின் இதயம், வலுவுள்ளதாக அமைந்திருக்க வேண்டுமென்பதால், நபியவர்களின் இதயம், பரிசுத்தமும் தூய்மையுமிக்க ஒரு பொருளாலேயே கழுவப்பட்டிருக்க வேண்டும். எனவேதான், இவ்வாறு செய்யப்பட்டது. அத்தன்மை இந்நீருக்கு உண்டு என செய்குல் இஸ்லாம் ஸிறாஜுத்தீன் அல் - பல்கீனி என்ற அறிவு மேதை குறிப்பிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஸம்ஸம்" நீர் அருந்த நபியவர்கள் காட்டிய ஆர்வம்.

"அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு 'ஸம்ஸம்' நீரை அருந்தக் கொடுத்தேன். அவர்கள் நின்ற வண்ணம் அதை அருந்தினார்கள்."

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரழி)
நூல் : புகாரி

"ஒரு வாளியில் "ஸம்ஸம்" நீரை நபியவர்கள் நின்ற நிலையில் குடித்தார்கள்"

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரழி)
நூல் : இப்னு ஹுஸைமா

"பெருநாள் தினத்தன்று ஹஜ்ஜுடைய தவாபை முடித்துக் கொண்ட அல்லாஹ்வுடைய தூதர் (ஸல்) அவர்கள், "ஸம்ஸம்" கிணற்றடியில் மக்களுக்கு நீர் வழங்கிக் கொண்டிருந்த அப்துல் முத்தலிபின் பிள்ளைகளிடம் வந்து "அப்துல் முத்தலிபின் மக்களே, நீங்கள் நீர் அள்ளிக் கொடுங்கள். உங்களுடன் சேர்ந்து நானும் இப்பணியை மேற்கொள்வதன் மூலம், நீங்கள் செய்கின்ற இவ்வேலையில் மக்கள் உங்களுக்கு சிரமம் கொடுக்க மாட்டார்கள் என்றிருந்தால், நானும் சேர்ந்திருப்பேன்." எனக் கூறினார்கள். அதன்பின், நபியவர்களுக்கு ஒரு வாளி நீரை அவர்கள் வழங்க, அதிலிருந்து அருந்தினார்கள்."

அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரழி)
நூல் : முஸ்லிம், இப்னு ஹுஸைமா

"நபி (ஸல்) அவர்கள் தண்ணீர் வழங்கும் இடத்திற்கு வந்து தண்ணீர் கேட்டார்கள். அப்போது அப்பாஸ் (ரழி) அவர்கள் ( தமது மகன்) ஃபழ்ல் (ரழி) அவர்களிடம், 'பழ்லே, நீ உன் தாயிடம் சென்று, அவர்களிடமுள்ள தண்ணீரை எடுத்து வந்து, நபி (ஸல்) அவர்களுக்குக் கொடு' என்று கூறினார்கள். 'இத்தண்ணீரையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குக் கொடுங்கள்” எனக் கேட்க, அப்பாஸ் (ரழி) அவர்கள் “அல்லாஹ்வின் தூதரே! மக்கள் தங்கள் கரங்களை இதனுள் போடுகிறார்கள்” என்று கூறினார்கள். மீண்டும் நபி (ஸல்) அவர்கள் “(பரவாயில்லை) இந்தத் தண்ணீரையே கொடுங்கள்” என்று கூறினார்கள். இறுதியாக, அதிலிருந்தே தண்ணீர் குடித்துவிட்டு “ஸம்ஸம்” கிணற்றிற்கு வந்தார்கள். அங்கு சிலர் தண்ணீர் வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களிடம், “செய்யுங்கள் நீங்கள் நல்ல பணியி (ஸாலிஹான அமலி)ல் ஈடுபட்டிருக்கிறீர்கள்.” என கூறிவிட்டு, “மக்கள் உங்களை மிகைத்துவிட மாட்டார்கள் என்றிருந்தால், ஒட்டகத்திலிருந்து இறங்கி நான் இதில் தண்ணீரை சுமப்பேன்.” என்று தம் தோளின் பக்கம் சைகை செய்து கூறினார்கள்.”

அறிவிப்பவர் : இப்னு இப்பாஸ் (ரழி)
நூற்கள் : புகாரி, அஹ்மத், பைஹகீ, தபறானி, இப்னு ஹுஸைமா

மேலே எடுத்துக் கூறப்பட்டுள்ள செய்திகள் மூலம், “ஸம்ஸம்” நீரை அருந்துவதிலும் அருந்தக் கொடுப்பதிலும் நபி (ஸல்) அவர்கள் காட்டியுள்ள ஆர்வம் வெளிப்படையாகத் தெரிகிறது. இது ஒரு நற்செயல் (ஸாலிஹான அமல்) என்பதாலேயே நபி (ஸல்) அவர்கள், அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள் என்பது எமக்குப் புலனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஸம்ஸம்" நீரின் மீதான ஆர்வம்.

"நான் இப்னு அப்பாஸூடன் அமர்ந்திருந்தபோது, அவருக்கருகில் வந்து அமர்ந்த ஒருவரை நோக்கி, "எங்கிருந்து வருகிறீர்?" என வினவினார்கள். "நான் "ஸம்ஸம்" நீர் அருந்திவிட்டு வருகிறேன்." என அவர் பதிலளித்தார். அதன்பின், "உரிய முறையில் அதை அருந்தினீரா?" என மற்றொரு வினாவை இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் வினவ, "இப்னு அப்பாஸே! அது எவ்வாறு?" என வந்தவர் திருப்பிக் கேட்டார். "கிப்லாவை நோக்கிய வண்ணம் "பிஸ்"மியை கூறி அருந்த வேண்டும். இடையிடையே, மூன்று விடுத்தங்கள் மூச்சு விட்டுக் கொள்ள வேண்டும். வயிறார அருந்த வேண்டும். பின் "அல்ஹம்து லில்லாஹ்" எனக் கூற வேண்டும். "எமக்கும் நயவஞ்சகர் (முனாபிகீன்) களுக்குமிடையிலான வேறுபாடு, அவர்கள "ஸம்ஸம்" நீரை வயிறார அருந்தாமையாகும்." என அல்லாஹ்வுடைய தூதர் சொல்ல, நான் செவிமடுத்துள்ளேன்.'என கூறினார்கள்."

அறிவிப்பவர் : இப்னு அபீ முலைகா (ரழி)
நூல் : இப்னு மாஜா

எனவே, நாமும் எமக்கு அந்நீர் தாராளமாக கிடைக்கும்போது, வயிறார அருந்தும் இக்கைங்கரியத்தை செய்வோமாக. அரிதாக கிடைக்கப் பெறுகின்றபோது, அவற்றை அருந்தி, அல்லாஹ்வுக்கு நன்றி கூறி அதிகமருந்தக் கிடைக்கவில்லையே என ஆதங்கப்படுவதுடன், அவ்வாறு பெற, இறைவனைப் பிரார்த்திப்போமாக. அப்போதே இதனுடன் தொடர்பான நயவஞ்சகர்கள் பட்டியலிலிருந்து, எம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதைக் கவனத்திற் கொள்வோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஸம்ஸம்" ஒரு நோய் நிவாரணி.

இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள், "ஸம்ஸம்" நீரை நன்கு அருந்திவிட்டு, தமது நோய்கள் நீங்க பிரார்த்தித்து அந்நீரை தமது கைகள், முகம் ஆகியவற்றில் தடவிக் கொள்பவராகவும் இருந்ததை நான் கண்ணுற்றிருக் கிறேன்" என அவரது மகன் அப்துல்லாஹ் அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : ஸியறு அ.ஃ.லாமின் நுபலாஉ 212/11

"நாணும் என்னுடன் சேர்ந்த சிலரும் நோய் நிவாரணத்துக்காக "ஸம்ஸம்" நீரை அருந்தி, இறையருளால் பல நோய்களிலிருந்து குணமடைந்திருக்கிறோம்." என இமாம் இப்னு கையிம் (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

நூல் : ஸாதுல் மஆத் 393/4

தாத்தாரிய சமூகத்தைச் சேர்ந்த, இஸ்லாமிய அறிஞர்களில் ஒருவரும் உஸ்மானிய ஆட்சிகால வரலாற்று ஆய்வாளர்களுள் ஒருவருமான அஷ்-ஷெய்க் அப்துர் ரஷீத் இபுறாஹீம் அத்ததாரி என்பவர் சீனா, யப்பான், கொரியா, இந்தியா, கிழக்காசியா, ஹிஜாஸ் தேசம் போன்ற நாடுகளுக்கான தனது பயணத்தின் பின், அது தொடர்பாக, "அல்ஆலமுல் இஸ்லாமி" என்ற நூலை துருக்கிய மொழியில் எழுதினார். அந்நூலில் "ஸம்ஸம்" பற்றி அவர் குறிப்பிடுகையில்,

"அதை நான் அருந்தி, பரீட்சித்துப் பார்த்த வேளை, என் உடம்பின் உட்பகுதியின் பல நோய்கள் குணமடைந்து, என் கண் பார்வையும் சீராகியதை உணர்ந்து கொண்டேன்." என அந்நீரை மகத்துவப்படுத்தி குறிப்பிட்டுள்ளார்.

நூல் : அல்ஆலமுல் இஸ்லாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நோயினால் உபாதிக்கப்பட்டவர்களுக்கு இந்நீரை நபியவர்கள் தெளித்ததாகவும் நபி மொழிகளில் தகவல்கள் காணப்படுகின்றன. அத்தோடு, "ஸம்ஸம் நீர் அருந்தப்படுவதன் நோக்கம் நிறைவுறும்" என்ற நபியவர்களின் கூற்றும் இதை உறுதிப்படுத்தி நிற்கிறது.

**"தோல்பைகளில், பாத்திரங்களில் "ஸம்ஸம்" நீரை அல்லாஹ்வுடைய தூதர் சுமந்து வந்து, நோயாளியின்மீது அதை ஊற்றுவதோடு, அவர்களுக்கு அருந்தவும் கொடுப்பார்கள்."**

அறிவிப்பவர் : ஆயிஷா (ரழி)

நூற்கள் : திர்மிதி, ஸில்ஸிலதுஸ் ஸஹீஹா

மேலுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், "ஸம்ஸம்" நீரில் நோயை நிவர்த்தி செய்யும் தன்மை காணப்படுகிறது என்பதை எம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஸம்ஸம்" நீரை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லல்.

புனித மக்கா செல்கின்ற அனைவருமே "ஸம்ஸம்" நீரை தம்முடன் தமது பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்கின்ற மரபு, இன்னும் நடை முறையில் காணப்படுகிறது. அங்கு புனித ஹஜ், உம்றா பயணங்கள் மேற்கோள்வோரும், தொழில் வாய்ப்பிற்காக அங்கு செல்வோரும் அந்நீரை தமது இல்லங்களுக்கு எடுத்துச் செல்வதும், தம்மை தரிசிக்க வருவோருக்கு அதை அருந்தக் கொடுப்பதும் ஒரு மரபாகக் காணப்படுகின்றது.

புனித மக்கா சென்று நாடு திரும்பியவர்களை சந்திக்கச் செல்கின்றவர்களும் "ஸம்ஸம்" நீர் அருந்த வேண்டும் என்ற உந்துதலின் நிமித்தமே, அவர்களிடம் செல்கின்றனர். அவர்கள் வழங்குகின்ற அந்த ஒரு மிடர் நீரை அருந்துவதற்காக, எண்ணற்றவர்கள் ஆசையுடன் தவிப்பதை நாம் காண்கிறோம்.

"நபியவர்கள் "ஸம்ஸம்" நீரை தம்முடன் எடுத்துச் செல்வார்கள்" என்று அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கும் செய்தி திர்மிதியிலும், "ஸம்ஸம்" நீரை நபியவர்கள் எடுத்துச் சென்று நோயாளிகள்மீது ஊற்றுவார்கள்" என்ற செய்தி பைஹகீயிலும் பதிவாகியுள்ளது.

எனவேதான், இதுவும் நபிவழியாகி, அந்நீர் சர்வதேச மட்டத்தில், கொண்டு செல்லப்படாத இடமே இல்லை எனும் நிலை இன்றிருக்கின்றது.

எனவே, புனித மக்கா செல்ல வாய்ப்புக் கிடைக்கும் ஒவ்வொருவரும், அந்நீரை தம்முடன் கொண்டு வருவது நபிவழியாக இருப்பதுடன் இவ்வழிமுறை அற்றுப்போய் விடாது பாதுகாப்பதும் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஸம்ஸம்" நீருடன் தொடர்புற்ற சில ஐயங்கள்.

"ஸம்ஸம்" நீர் பற்றி பலரிடையே, சில சந்தேகங்கள் காணப்படுகின்றன. அவைகள் பற்றி நாளாந்தம் பேசவும் எழுதவும்படுகின்றன. அவைபற்றி, சுருக்கமாக நோக்குவோம்.

01. "ஸம்ஸம்" நீரினால் வுழூ செய்வது தகுமா?

நபி (ஸல்) அவர்கள் பல தடவைகள் "ஸம்ஸம்" நீரினால் வுழூ செய்துள்ளார்கள் என பல ஹதீஸ்கள் குறிப்பிடுகின்றன. பின்வரும் நபிமொழி அதற்கு சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும்.

> **"............நபி (ஸல்) அவர்கள் தனது ஹஜ்ஜின்போது ஒரு வாளி "ஸம்ஸம்" நீர் கொண்டு வரச் செய்து அதிலிருந்து அருந்தி விட்டு எஞ்சிய நீரில் வுழூ செய்தார்கள் .........."**
>
> நூல் : முஸ்னத்

ஷாபிஈ, ஹனபி, ஹன்பலி, மாலிக் ஆகிய நான்கு மத்ஹபுகளும் "ஸம்ஸம்" நீரினால் வுழூ செய்வதை தடை செய்யாது, ஆகும் என்றே தீர்ப்பும் வழங்கியுள்ளனர். எனவே அதனால் வுழூ செய்வதில் தவறேதுமில்லை. வுழூவும் ஏற்றுக் கொள்ளப்படும்.

02. "ஸம்ஸம்" நீரினால் அசுத்தத்தை (நஜீஸை) அகற்றுவது கூடுமா?

"இழிவான இடங்களில் "ஸம்ஸம்" நீரை பாவிப்பதோ, அசுத்தமா (நஜீஸா)னவற்றை துப்பரவு செய்ய உபயோகிப்பதோ, அசுத்தமான இடங்களில் அதனை ஊற்றுவதோ கூடாது" என, ஹனபி மத்ஹபைச் சார்ந்த பலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

"சிறுநீர், மலம் கழித்துவிட்டு, "ஸம்ஸம்" நீரினால் துப்பரவு செய்தல் கூடவே கூடாது" என மாலிக் மத்ஹபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த சிலரும், ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்த சிலரும் தீர்ப்புக் கூறியுள்ளனர்.

அதன் சிறப்புப் பற்றி பல்வேறு வகையான நபிமொழிகள் காணப்படுவதாலும், நபிகளாரின் இருதயம் அந்நீரினாலேயே கழுவப்பட்டிருப்பதனாலும், அந்நீரைக் குடிப்பதற்கும், வுழூ செய்வதற்கும், நோயாளியின்மீது தெளிப்பதற்குமே நபியவர்கள் பயன்படுத்தி இருக்கிறார்கள் எனக் காரணம் கூறி "(நஜீஸை) அசுத்தத்தை அகற்றுவதற்கு உபயோகப்படுத்தலாகாது" என வாதிடுகின்றனர்.

இன்னும், நபித் தோழர்கள், தாபிஈன்கள், தபஉத் தாபிஈன்கள் அந்நீரை இவ்வாறான விடயங்களுக்கு பயன்படுத்துவதை விட்டும் தவிர்ந்துள்ளார்கள். இந்நிலை இன்றுவரை நீடித்திருக்கிறது. என்றுமே நீடிக்க, அல்லாஹ் அருள் புரிவானாக! ஏனெனில் அப்படி செய்வது விலக்கப்பட்ட (ஹராமான) விடயம் என்று கூட சிலரினால் தீர்ப்பு வழங்கப் பட்டிருக்கின்றது.

""ஸம்ஸம்" நீரை தவிர, வேறெந்த நீரும் கைவசமில்லாதபோது, அதனை அசுத்தத்தை (நஜீஸை) அகற்ற உபயோகிக்க இயலும்" என்பது ஒரு சில அறிஞர்களின் கூற்றாகும்.

அந்நீரின் மகிமையானது மக்களின் மனதிலிருந்து அகன்றுபோய் விடாது, பாதுகாத்துக் கொள்ள இது உதவும்.

03. "ஸம்ஸம்" நீரை எந்நிலையில் அருந்துவது ?

"ஸம்ஸம்" நீரை நின்ற நிலையில் அருந்துவதா ? அல்லது அமர்ந்து இருந்து அருந்துவதா ? என்ற விடயத்தில், இஸ்லாமிய சட்டக்கலை அறிஞர்களிடையே கருத்து முரன் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

""ஸம்ஸம்" நீரை நபியவர்களுக்கு நான் அருந்தக் கொடுத்தபோது அவர்கள் நின்ற நிலையில் அதை அருந்தினார்கள்."

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரழி)
நூற்கள் : புகாரி, முஸ்லிம்

"நின்ற நிலையில் நீர் அருந்துவதை நபியவர்கள் தடை செய்துள்ளார்கள்."

அறிவிப்பவர் : அனஸ் (ரழி)
ஆதாரம் : முஸ்லிம்

இங்கே எழுதப்பட்டுள்ள இரு நபி மொழிகளில், முதலாவதற்கு முக்கியத்துவம் கொடுத்து, நபி செயல் பேணப்படல் வேண்டும் என்ற கருத்தைக் கொண்ட ஹனபி மத்ஹபைச் சேர்ந்த ஒரு சில அறிஞர்கள், நின்ற நிலையிற்றான் அருந்த வேண்டும் என்று தமது விவாதத்தை முன் வைத்துள்ளனர்.

"ஸம்ஸம்" நீரை நின்ற நிலையில் அருந்தியது நபியவர்களின் செயல், எனவே, அதை அப்படியே செய்வதில் தவறில்லை" என்ற கருத்தை ஹனபி, மாலிக் மத்ஹபுகளின் அறிஞர்களிற் சிலர் தெரிவித்துள்ளனர்.

ஹனபி மத்ஹபின் மற்றொரு சாராரும், ஷாபிஈ மத்ஹபின் அறிஞர்களும் அமர்ந்து அருந்துவதே நபிவழி என வாதிட்டு இங்கு குறிப்பிட்ட இரண்டாவது நபி மொழியை ஆதாரமாக குறிப்பிட்டுள்ளனர்.

இவைகளை ஆராய்ந்த பல மார்க்க மேதைகள், பின்வரும் கூற்றை இறுதித் தீர்ப்பாக முன்வைக்கின்றனர்.

நின்ற நிலையில் அருந்துவது தடை செய்யப் பட்டிருப்பதால், "ஸம்ஸம்" நீர் உட்பட எதையுமே நின்ற நிலையில் அருந்துவது கூடாது. நபியவர்கள் செய்துள்ளார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வாதிடுவோர், அவ்வாறும் செய்ய அனுமதியுண்டு என்ற முடிவுக்கு வரவேண்டுமே தவிர, அதுவேதான் வழிமுறை என கொள்ளலாகாது.

இது சர்ச்சைக்குரிய விடயமாதலால், அறிஞர் பெருமக்களின் கருத்துகளுக்கு முக்கியத்துவமளித்து, அவர்களுக்கு அல்லாஹ் அருள்புரிய பிரார்த்திப்போமாக.

04. "ஸம்ஸம்" கிணறு ஆழமாகியது எப்படி ?

நபி இஸ்மாயீல் (அலை) அவர்களையும், அன்னை ஹாஜறா (அலை) அவர்களையும் கண்ணியப்படுத்தி, அவர்களது தியாகத்திற்காக, அல்லாஹ் வெளிப்படுத்திய நீரூற்று, நிலத்தின் மேற்பரப்பிலேயே தோன்றி இருந்தது. அவ்வாறிருக்க, ஆழமான கிணறாக எப்படி மாற்றமடைந்து உருப்பெற்றது ? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததே!

அந்நீரூற்று, நிலத்தின் மேற்பரப்பில் உருவானாலும்கூட, அன்னை ஹாஜறா அவர்கள் அதை சூழ அணை போட்டதாக, வரலாறு கூறுகிறது. அதை பின்வரும் நபிமொழி படம் பிடித்துக் காட்டுகிறது.

> **"இஸ்மாயீலின் தாயாருக்கு அல்லாஹ் அருள்புரிவானாக! அவர் "ஸம்ஸம்" நீருக்கு அணை போட்டிராதிருந்தால், அது சதா ஓடிக் கொண்டிருக்கும் ஓர் ஊற்றுக் கண்ணாய் இருந்திருக்கும்."**

நூல் : புகாரி

இன்னும், கால ஓட்டத்தில் அக்கிணறு தூர்ந்து போனபின், நபியவர்களது பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்கள் அதை மீண்டும் தோண்டி புனர் நிருமானம் செய்தார்கள் என்பதையும் அறிந்து கொண்டுள்ளோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. "ஸம்ஸம்" நீரில் தேனீர் தயாரிக்கலாமா ?

உணவு சமைக்கலாமா ? என்றொரு வினாவை சவூதி அரேபியாவின் முப்தியும் அங்குள்ள ஆலிம்கள் உயர் சபையின் தலைவருமான அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் பின் அப்துல்லாஹ் ஆல் அஷ்ஷெய்க் றஹிமஹுல்லாஹ் அவர்களிடம் வினவப்பட்டதற்கு

"இதில் தவறில்லாவிடினும் தவிர்ந்து கொள்வது நல்லது. ஏனெனில் பசித்தவர்களுக்கு ஆகாரமாகவும் தாகித்தவர்களுக்கு நிவாரணமாகவும் இருக்கும் "ஸம்ஸம்" நீர் அருந்துவதற்காகவே உள்ளது." என்று தீர்ப்புக் கூறி, ஜாஹிலிய்யா காலத்தில் "ஸம்ஸம்" நீரை "பசி தீர்க்கும் நீர்" (ஷப்பாஆ) என்றே பெயர் சொல்லி அழைத்ததாகவும் குறிப்பிடுகிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை நின்றவைகள்.

01. மு.ஃ.ஜிஸாதுஷ் ஷிபா பீமாஇ ஸம்ஸம்
02. பழாஇலு மாஇ ஸம்ஸம்
03. மஜல்லதுல் ஹஜ் (ஷவ்வால் 1418 பெப்ரவரி 1998)
04. அல்ஆலமுல் இஸ்லாமி )1733)
05. றிஸாலதுல் இஹ்வான் (126)

## படித்துவிட்டீர்களா?
## ஆசிரியரின் பிற நூற்கள்

01. அல்குர்ஆன் சுன்னா ஒளியில் புகையும் புகைத்தலும்
02. சீதனம்
03. பித்அத் ஓர் ஆய்வு
04. இஸ்லாம் ஓர் இனிய மார்க்கம்
05. நற்செயல்களும் பிரதிபலன்களும்
06. அன்னை கதீஜா
07. ஷிர்க்கை தகர்த்த இளைஞர் -இபுறாஹீம் (அலை)
08. கிணற்றில் தள்ளப்பட்ட சிறுவர் - யூசுப் (அலை)
09. கப்பல் கட்டிய முதியவர் - நூஹ் (அலை)
10. அதிசய நீரூற்று ஸம்ஸம்

## வெளிவர இருப்பவை இன்ஷாஅல்லாஹ்

01. குற்றவாளிக் கூண்டில் நபித் தோழர் த.ஃலபா
02. நதியில் மிதந்த மழலை - மூஸா (அலை)
03. அன்னை ஆயிஷா (ரழி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதில் தெளிவான அத்தாட்சிகளும் மகாம் இப்றாஹீமும் உள்ளன"
(03:97)

என்ற புனித அல்குர்ஆனின் வசனம் பறைசாற்றுவதற்கமைய, 365 நாட்களும் நிமிடம் தவறாமல், இரவு பகலாக தவாஃப் எனும் அற்புத வணக்கம் நடந்தேறிக் கொண்டிருக்கும், பக்திப் பரவசம் நிறைந்த பாசறை புனித கஃபாவில், கண்டு பிடிக்கப்படாத பல அத்தாட்சிகள் இருந்த போதிலும் இன்று கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கும் "ஸம்ஸம்", தெளிவான அத்தாட்சியாக அதிசயமாகத் திகழ்கிறது.

எவருக்கும் எச்சந்தேகத்தையும் ஏற்படுத்தா வண்ணம், காண்பவருக்கு களிப்பைக் கொடுத்து, ஆய்வாளர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்து, பரிசோதனையின்போது அனைத்து நீரையும் விஞ்சி, இயல்பிலேயே பரிசுத்தத்தை பறைசாற்றி, பல சிறப்பு அதிசயங்களை தன்னகத்தே கொண்ட பாலைவனத்து "ஸம்ஸம்" அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் ஒன்றே.

அது பரிசுத்தமானது, அற்புதங்கள் நிறைந்தது என்பது வாய்வழிக் கதைகளோ இதிகாசங்களில் கூறப்பட்ட செய்திகளோ, எவருக்கும் புரியாத மறைவான விடயங்களோ அல்ல. மாறாக நவீன அறிவியல் தொழில்நுட்ப சாதனங்கள் மூலம் நிறுவப்பட்ட விடயமாகும்.

தற்போது அக்கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள பாரிய வலு கொண்ட இயந்திரங்கள் மூலம் நாளொன்றுக்கு 50 இலட்சம் லீட்டர் நீர், "ஸம்ஸம்" கிணற்றிலிருந்து எடுக்கப்படுகிறதெனில் அது அற்புதமில்லையா ?
மாபெரிய அத்தாட்சி இல்லையா ?
சத்திய மார்க்கம் இஸ்லாம்தான் என்பதை நிறுவ இந்த ஒன்று போதாதா?

"மாநிலத்து மதுரத்தில் மகிமைமிக்கது "ஸம்ஸம்""
என்பது நபிமொழி

ISBN : 978-955-8732-49-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org